# அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரியருக்கு எழுதின நிருபம்

**முன்னுரை:**

இந்த நிருபம் இதை பெற்றுக்கொண்ட சபை இருந்த இடத்தின் பெயரால் அழைக்கப்படுகிறது. ரோமாபுரியில் இருந்த கிறிஸ்துவின் சபையாருக்கு எழுதப்பட்ட இந்த நிருபம், மிகவும் அருமையான நிருபமாக இருப்பதோடு; தேவனுடைய பிள்ளைகளாகிய நமக்கும் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டதாக இருக்கிறது (2 தீமோ 3:16,17). இந்த நிருபம் உபத்திரவத்தின் மத்தியில் இருக்கிற ஒவ்வொரு கிறிஸ்தவரையும் பலப்படுத்தவும் (ரோம 8:31), உற்சாகப்படுத்தவும் (ரோம8:36-39), செய்கிறது. தேவன் நம்மீது கொண்டுள்ள அளவற்ற அன்பையும் (ரோம 5:8); அவர் நம்மீது காண்பித்த அவருடைய மகா பெரிய கிருபையும் ( ரோம 5:15) நமக்கு காண்பிக்கிறது. இந்த நிருபம் முதல் எட்டு அதிகாரங்கள் உபதேசமாகவும்; கடைசி எட்டு அதிகாரங்கள் நடைமுறை பயன்பாட்டுப்பகுதியாக இருக்கிறது.

**ஆசிரியர்:**

1. அப்போஸ்தலனாகிய பவுல் ( 1:1,2)
2. இந்த நிருபம் பவுலினால் கூறப்பட்டு தெர்தியு என்பவரால் எழுதப்பட்டது. (16:22)

**எழுதப்பட்ட காலமும், இடமும்:**

பவுலின் மூன்றாம் சுவிசேஷப் பயணம், அப் 18:23 -யிலிருந்து தொடங்கியது. அப் 19:1 -யில் பவுல் எபேசுக்கு வந்ததாக பார்க்கிறோம். அங்கே அவர் இரண்டு வருடம் தேவனுடைய ஊழியத்தில் செலவிட்ட பின்பு (அப் 19:10), **“இவைகள் முடிந்தபின்பு, பவுல் மக்கெதோனியா அகாயா என்னும் நாடுகளில் சுற்றிநடந்து, எருசலேமுக்குப்போகும்படி ஆவியில் நிருணயம்பண்ணிக்கொண்டு: நான் அங்கே போனபின்பு ரோமாபுரியையும் பார்க்கவேண்டியதென்று சொல்லி,” அப் 19:21** என பார்க்கிறோம். பவுல் எருசலேமுக்குப் போன பின்பு ரோமாபுரியை பார்க்க வேண்டும் என விரும்பினார் (ரோம 15:23); எபேசுவில் தங்கியிருக்கும் போது பெரிய கலகம் உண்டானது (அப் 19:23-41). இதற்கு பின்பு பவுல் மக்கெதோனியாவுக்கு சென்றார். (அப் 20:1; 1 கொரி 16:5,6); பின்பு பவுல் கொரிந்து (கிரேக்கு) வந்ததாக கூறுகிறார் (அப் 20:2,3; 1கொரி 16:5,6). இந்த கொரிந்து வருகையின் போது பவுல் கி.பி 57 - 58-யில் தனது ரோமருக்கான நிருபத்தை எழுதியிருக்கலாம். கிரேக்கு தேசத்தில் அமைத்திருந்த கெங்கிரேயாவிலுள்ள ஒரு சகோதரியாகிய பெபேயாளைக் குறித்தும் பவுல் தனது ரோமருக்கு எழுதின நிருபத்தில் குறிப்பிட்டுள்ளார் (ரோம 16:1).

**மைய கருத்து மற்றும் நோக்கம் :**

இந்த நிருபத்தின் ஆரம்பத்திலும் , முடிவிலும் அப். பவுல் பயன்படுத்திய வார்த்தையே நிருபத்தின் மைய கருத்தாக இருக்கிறது.(ரோம 1:7; ரோம 16:25) **“ கீழ்ப்படிதலுள்ள விசுவாசம்”**

முதலாம் நூற்றாண்டில் கிறிஸ்தவர்கள் மிகுந்த உபத்திரவங்களை சந்தித்துக்கொண்டிருந்தனர். கிறிஸ்தவர்களின் மீது தீவிரமான வெறுப்பு கொண்டிருந்த, காட்டுமிராண்டித்தனமும், வக்கிரபுத்தியும் நிறைந்த சக்கரவர்த்தி நீரோவின் ஆட்சியின் கீழ்

இதைகாட்டிலும் பெரிதான உபத்திரவங்களை கிறிஸ்தவர்கள் அனுபவித்தனர். கிறிஸ்தவர்கள் மீதான உபத்திரவங்கள் ஆரம்பமான ஒரு காலகட்டமாகிய நீரோவின் ஆட்சியின் இந்நிருபத்தை அப். பவுல் எழுதினார். ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களை பலப்படுத்தவும், உற்சாகப்படுத்தவும் அதோடு கூட கிறிஸ்தவ ஓட்டத்தில் முன்னேறிச் செல்லவும் பண்ண இந்த நிருபம் எழுதப்பட்டதோடு (ரோமர் 5,6,8,12), ரோமாபுரியில் இருக்கிற கிறிஸ்தவர்களை சந்திக்க தான் வருவதை அவர்களுக்கு அறிவிக்கவும், (ரோம 1: 9-15; ரோம 15:22-32) நிருபம் எழுதப்பட்டது. பவுல் சுவிசேஷத்தை பிரசிங்கிக்க கடனாளியாக இருந்தார், ரோமார்களுக்கு சுவிசேஷத்தை பிரசங்கிக்க அதிகமாக விரும்பினார் என்பதை இந்த நிருபத்தில் கூறிப்பிடுகிறார் (1:12-15)

**"அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" ரோமர் 8:28.**

**ரோமாபுரியும், ரோமாபுரி கிறிஸ்துவின் சபையாரும், பவுலும்:**

ரோமாபுரி என்பது உலகத்தின் மிகப்பெரிய நகரமாக, பரந்து விருந்திருந்த வல்லமை வாய்ந்த பேரரசாக இருந்தது. இம்மாநகரம் ஒழுக்கக்கேட்டுக்கும், அவபக்திக்கும் பேர்போன ஒன்றாகவும் இருந்தது. இந்த மாநகரத்தில் பலதெய்வ வணக்கத்தார் இருந்தார்கள், சக்கரவர்த்தி தொழுகை எனும் பழக்கம் கட்டயமாய் இருந்தது.

ரோமாபுரியில் இருந்த சபை பற்றி பவுல் பேசும் போது **"உங்கள் விசுவாசம் உலகமெங்கும் பிரசித்தமாகிறபடியினாலே, முதலாவது நான் உங்களெல்லாருக்காகவும் இயேசுகிறிஸ்து மூலமாய் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்" ரோம 1:8** என கூறுகிறார். இவர்களின் விசுவாசம் உலகமெங்கும் பிரசித்தமாய் இருந்தது. அதாவது அவர்களின் விசுவாசம் நீண்ட தூரத்திற்கும் அறியப்பட்டிருந்தது. மோசமான சூழ்நிலையில் இவர்கள் வாழ்ந்து கொண்டிருந்தாலும் இவர்களின் விசுவாசம் உண்மையுள்ளதாக இருத்திருக்கிறது, இவர்கள் தேவப்பிரயரும், பரிசுத்தவான்களாகும் படி அழைக்கப்பட்டவர்களுமாய் இருந்தார் (1:1,2).

பவுல் ரோமாபுரியில் இருந்த சபையை ஸ்தாபிக்கவில்லை, பேதுரு ரோமாபுரிக்கு வந்து சபை உருவாக்கினார் என்பதற்கும் ஆதாரம் இல்லை பின்பு எப்படி ரோமாபுரியில் சபை ஸ்தாபிக்கப்பட்டது? அப்போஸ்தலர் 2:10 -யின் படி முதன்முறையாக சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்ட எருசலேமில் ரோமாபுரியாரும் இருந்தார்கள். ஒருவேளை சுவிசேஷத்திற்கு கீழ்படிந்து ஞானஸ்நானம் பெற்றவர்கள் (அப் 2:41) , தங்கள் சொந்த இடத்திற்கு சுவிசேஷத்தை கொண்டு சென்றுயிருக்கலாம் அதன் மூலமாய் சபை ஸ்தாபிக்கபட்டிருக்க வேண்டும்(ரோம 16:3-5).

இந்த நிருபம் எழுதப்பட்ட போது பவுல் ரோமாபுரிகிறிஸ்தவர்களை பார்த்ததில்லை; ரோமாபுரியில் இருந்த சபையாரை பார்க்க பவுல் நீண்ட காலமாக விரும்ப முடையவராய் இருந்தார். (ரோம 15:23; அப் 19:21; அப் 23:11). பின்பு பவுல் ரோமாபுரிக்கு சென்றார். (அப் 28:14-17), அங்கே இரண்டு ஆண்டுகள் வீட்டு சிறையில் இருந்து தன்னுடைய தேவனுடைய வேலையை செய்தார் (அப் 28:30,31),